| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| முனைவர். சி. உஷாராணி,<br>எம்.எஸ்ஸி.,பி.எட்.,பிஎச்.டி.,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.<br>(சென்னை, காரைக்கால் மற்றும் பாண்டிச்சேரி தவிர்த்து) |

**ந.க.எண்.029227 /D/2020** **நாள் :13.01.2021**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள்:** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு (TRUST), ஜனவரி – 2021 – தேர்வுமைய பெயர்ப்பட்டியல் மற்றும்தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகள் பதிவிறக்கம் செய்தல் –தொடர்பாக.

------

24.01.2021 அன்று நடைபெறவிருக்கும் தமிழ்நாடு ஊரகத் திறனாய்வுத் தேர்விற்கு வருகைபுரியும் மாணவர்களின் பெயர்ப்பட்டியலினைத் தேர்வு மையம் வாரியாக **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் **18.01.2021 பிற்பகல்** முதல் பதிவிறக்கம் செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒவ்வொரு தேர்வு மைய கண்காணிப்பாளர்களும் தவறாமல் பெயர்ப்பட்டியலினை பதிவிறக்கம் செய்துகொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பதிவிறக்கம் செய்தவுடன் தேர்வுமையக் கண்காணிப்பாளர்கள் தேர்வு மையத்துடன் இணைக்கப்பட்டுள்ள பள்ளிகள் மற்றும் தேர்வர்களின் எண்ணிக்கை சரியாக உள்ளதா என்பதையும் அம்மையத்திற்குட்பட்ட அனைத்து தேர்வர்களுக்கும் பெயர்ப்பட்டியல் பெறப்பட்டுள்ளதா என்பதையும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**தேர்வுக்கூடநுழைவுச்சீட்டு:**

மேற்படி தேர்விற்கான தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களை **18.01.2021** பிற்பகல் முதல் பள்ளித் தலைமையாசிரியர்கள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளம் மூலம் ஏற்கனவே இத்தேர்விற்கு வழங்கப்பட்ட **User ID /Password** னைக் கொண்டு பதிவிறக்கம் செய்து கொள்ள உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2..

தேர்வர்களின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளில் பெயர் / பிறந்த தேதி ஆகியவற்றில் திருத்தம் ஏதும் இருப்பின் திருத்தத்தினை சிவப்பு நிற மையினால் சுழித்து சரியான பதிவினைக் குறிப்பிட்டு பள்ளித் தலைமையாசிரியர்களிடம் சான்றொப்பம் பெற்று தேர்வெழுத அத்தேர்வர்களுக்கு அனுமதி வழங்க தேர்வு மைய கண்காணிப்பாளரிடம் அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–
இயக்குநர்

**நகல்**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் – மேற்காண் தேர்விற்கான பெயர்ப்பட்டியல்களை அனைத்து தேர்வுமைய கண்காணிப்பாளர்கள் பதிவிறக்கம் செய்ய உரிய அறிவுரை வழங்கவும் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து தலைமையாசிரியர்கள் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுக்களைப் பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.
   - தகவலுக்காகவும், தக்க நடவடிக்கைக்காகவும்